Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 316
சனிக்கிழமை
08 ஒக்ரோபர் 2022
புரட்டாதி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## மின்னல் தாக்கி பெண் மரணம்!

வவுனியாவில் சோகம்

வவுனியா, ஒக்.8
வவுனியா, மாமடுவில் மின்னல் தாக்கத்துக்கு இலக்கான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. 11

# ஐ.நா.வின் தீர்மானம் பாதிப்பை ஏற்படுத்தும்

- கடந்தகால தலைவர்களே இந்த நிலைமைக்கு காரணம்
- சர்வதேச உதவிகள் கைவிட்டுப் போகலாம்
- நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச விசனம்



கொழும்பு, ஒக்ரோபர் 8
ஐ.நா.வின் புதிய தீர்மானத்தால் சிறிலங்கா பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. நாடு என்ற ரீதியில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கொள்கை மாற்றம் மற்றும் தலைவர்கள் மீதான நம்பிக்கை சீர்குலைவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கான முக்கியமான காரணமாகும். 11



## வல்லிபுரம் ஆழ்வார்; தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.8
வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரத்தாழ்வார் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது.
காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை 10

## உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரிகள் மீதான வேட்டை தொடர்கிறது

ஒரு வாரத்தில் மாத்திரம் 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 8
கொக்குவில் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் சேர்த்து இந்த 10

## வாக்குறுதிகளை மீறியமையே ஆதரவு குறையக் காரணம்

ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.8
சிறிலங்கா முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தாலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஆதரவு கிடைக்கவில்லை என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 11

## ஆபத்தான தீக்காயத்தோடு குடும்பஸ்தர் சிகிச்சையில்!

கைதான மனைவிக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஒக்.8
ஆபத்தான தீக்காயங்களுடன் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் மீது பெற்றோல் ஊற்றித் தீவைத்து ஆபத்தான தீக்காயங் 11

## மோ.சைக்கிளை திருடியோர் சங்கிலியையும் அறுத்தனர்!

யாழ்ப்பாணம், ஒக்.8
வல்வெட்டித்துறை, ஊரிக்காடுப் பகுதியில் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்றவர்கள், அந்த மோட்டார் சைக்கிளில் சென்று சங்கிலி அறுப்பிலும் ஈடுபட்டுள்ளனர். 11

## பணிப்புறக்கணிப்பு அழைப்புக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8
பருத்தித்துறை இ.போ.ச. சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று நேற்று முன்தினம் அறிக்கை வெளியிடப்பட்டிருந்த நிலையில், பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப் 11

## நேற்றும் யாழ்ப்பாணத்தில் ரயில் விபத்தில் உயிர் காவு

யாழ்ப்பாணம், ஒக்.8
யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த ரயில் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
புதிய செம்மணி வீதியைச் சேர்ந்த போல் தனஞ்சயன் (வயது-78) என்பவரே உயிரிழந்துள்ளார்.
இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.
ஒரு கண் மற்றும் காது குறைபாடுள்ள 10

## திருடப்பட்ட மோ.சைக்கிள் வீதியில் அநாதரவாக மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.8
வட்டுக்கோட்டை, அராலியில், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட நிலையில், நாவந்துறை வீதியில் நிறுத்தப்பட்டிருந்தபோது அது மீட்கப்பட்டுள்ளது. 11

## தமிழரை அழிக்க நினைத்தால் இறுதியில் அழிந்தே போவீர்கள்

நாடாளுமன்றில் எச்சரித்தார் கஜேந்திரகுமார் எம்.பி.



கொழும்பு, ஒக்.8
தமிழர்களை அழிக்க நினைத்தால் இறுதியில் நீங்களே அழிந்துபோவீர்கள் என்று நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தைப் பார்த்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டவரைவில் நிறைவேற்று அதிகார 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவுக்கு தோல்வி தமிழர்களுக்கு வெற்றியல்ல!

## உருத்திரகுமாரன் அறிக்கை

**நியூயோர்க், ஒக். 8**

**சிறிலங்கா தொடர்பில் ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், சிறிலங்காவுக்கு தோல்வியாக இருந்தாலும், தமிழர்களுக்கு வெற்றியல்ல என தெரிவித்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழர்களுக்கு எதிரான பெரிய மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலுக்கு இந்தத்தீர்மானம் வழியமைக்கவில்லை என்பதோடு, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற சிறிலங்காவின் இனப்படுகொலை இராணுவமானது, பொறுப்புக்கூறலுக்கான அச்சமேதுமின்றி, தமிழர்கள் எதிரான தனது மனித உரிமைமீறல்களை தொடரவே வழிசெய்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.**

இலங்கைக்குஇரண்டுஆண்டுகள்கால நீடிப்புவழங்கும்வகையில் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'இந்தியா மீண்டும் வாக்களிக்காமல் விலகியதால் ஈழத் தமிழர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். சிறிலங்கா தனது 'சீனத் துரும்புச்சீட்டை' நன்றாகக் கையாண்டு அதன் அண்டை நாடான இந்தியாவை பயமுறுத்தி அமைதியாக்கிவிட்டது' எனத் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், 'பிராந்திய வல்லரசான இந்தியாவும், உலக வல்லரசும் தார்மீகக் கோட்பாடுகள், துணிவு, உறுதிப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் செயற்படும் என்று ஈழத் தமிழர்களாகிய நாங்கள் எதிர்பார்த்தோம்' எனத் தெரிவித்துள்ளார்.

'ஐ.நா.வின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி இறுதிப்போரின்போது இனப்படுகொலை செய்யப்பட்ட 70 ஆயிரம் பேர் விடயத்தை புறந்தள்ளிவிட்டு, தென்னிலங்கை கிளர்ச்சியில் உயிரிழந்த 10 பேருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது' எனவும் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# கேகாலை மருத்துவமனையில் பிளாஸ்ரிக் அறுவை மூலம் பிறப்பு வடு நீக்கி சாதனை!

கொழும்பு, ஒக். 8

கேகாலை ஆதார மருத்துவமனையில் பிளாஸ்ரிக் அறுவைசிகிச்சை மூலம் இளைஞர் ஒருவரின் முகத்திலிருந்து பிறப்பு வடு நீக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி - உடகரவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இராணுவச்சிப்பாய்க்கே கேகாலை மருத்துவமனையின் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ஆனந்தகுமார ஜயவர்தனவால் இந்த அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்:

இது சவாலான அறுவைசிகிச்சையாகும். இதனை சரியாகச் செய்ய முடியாது போயின் அவரின் முகம் சிதைந்துவிடும். குறித்த இளைஞர் தனது முகத்திலுள்ள இந்த பிறப்பு அடையாளத்தால் சமூகத்தை எதிர்கொள்ள முடியாத அவதிக்குள்ளாக்கப்படுகிறேன் எனத் தெரிவித்து சிகிச்சை பெற வந்தார்.

அதனையடுத்து அவருக்கு கடந்த 4ஆம் திகதி 2 மணிநேர பிளாஸ்ரிக் அறுவைசிகிச்சை மூலம் காலில் இருந்து தோல் எடுத்து முகத்தில் பொருத்தப்பட்டது. தற்போது நோயாளி ஆரோக்கியமாக உள்ளார் - என்றார். (ச-இ)

# தலையீடுகள் இருந்தால் பதவி துறப்பதே வழி

## கோபா குழுத் தலைவர் கபீர் எம்.பி. தெரிவிப்பு

சுயாதீனமாகச் செயற்பட முடியாமற் போனால் 'கோபா' குழுவின் தலைமைப்பதவியை துறப்பது தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், 'கோபா' குழுவின் தலைவருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப்பதவியை எதிரணிக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், கோபா குழுவுக்கு நான் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டிருந்தேன். எனினும், கோப் குழுவின் தலைவர் நியமனம் தொடர்பில் எம்மால் திருப்தி கொள்ளமுடியாது. அந்தப்பதவிக்கு எரான் விக்கிரமரத்னவை நியமிக்க எதிரணிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

கோப் குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ரஞ்சித் பண்டார திறமையானவர் என்ற போதிலும் கொள்கை ரீதியலான முரண்பாடு உள்ளது. அவரின் பெயரை மஹிந்தானந்த அளுத்கமகே முன்மொழிந்து அதனை ரோஹித அபேகுணவர்த்தன வழிமொழிந்தார். ஆளுங்கட்சி சார்பிலேயே இந்தத்தேர்வு இடம்பெற்றுள்ளது. எனவே, இந்தக்குழு ஊடாக அரச நிறுவனங்கள் தொடர்பில் எவ்வாறு விசாரணை நடத்துவது?

எனவே, 'கோபா' குழுவின் தலைவராகச் செயற்படுவது பற்றியும் சிந்திக்கவேண்டியுள்ளது. சுயாதீனமாகச் செயற்பட முடியாவிட்டால் முடிவொன்றை எடுப்பேன் - என்றார். (ஒ-44)

# போதை தாக்கம், வீட்டுத்தோட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தொடர் சமூக நிகழ்வாக, தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக பேசப்பட்டு வரும் போதைப்பாவனைத் தாக்கம் தொடர்பாகவும் தென்னையுடன் கூடிய வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாகவும் பல இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12மணி வரை வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலும் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை யாழ்.மத்திய கல்லூரியிலும் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நவாலி நல்லிணக்க மண்டபத்திலும் 12 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் 10 மணி வரை ஹாட்லிக் கல்லூரியிலும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை வடமராட்சி நல்லிணக்க மண்டபத்திலும் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை சுதுமலை அம்மன் மண்டபத்திலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் வசாவிளான், யாழ்.மத்தியகல்லூரி, மானிப்பாய் விநாயகர், நவாலி நல்லிணக்க மண்டபம், ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி நல்லிணக்க மண்டபம் மற்றும் சுதுமலை அம்மன் ஆன்மீக அறக்கட்டளை ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

கருத்தரங்கில் அந்தந்த பிரதேசங்களில் உள்ள தென்னைப் பயிர்செய்கையாளர்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பயனாளிகளுக்கு அந்தந்த பிரதேச ஆன்மீக அறக்கட்டளை அமைப்பினால் வீட்டுத்தோட்டச் செய்கைக்காக தென்னங்கன்றுகளும் காய்கறி விதைப்பைக்கற்றுக்களும் விநியோகிக்கப்படவுள்ளன என்று தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார். (ஒ-14)

# 22ஆவது திருத்த சட்டவரைவு ஒத்திவைக்க பஸில் காரணம்

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 8



அமெரிக்காவில் உள்ள 'ஏழு மூளை' அரசியல்வாதியின் தேவைக்கேற்பவே அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் பிற்போடப்பட்டுள்ளது என்று 'உத்தர லங்கா சபாகயவின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புக்கான 22 ஆவது திருத்தச் சட்டவரைவை விவாதத்துக்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அது திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பதவிகளை வகிப்பதற்கு மேற்படி சட்டவரைவில் தடை இருப்பதால், அமெரிக்காவில் உள்ள ஏழுமூளை அரசியல்வாதி, நாடாளுமன்றத்தில் உள்ள தனது கையாள்கள்மூலம், சட்டவரைவு விவாதத்துக்கு வருவதை தடுத்துள்ளார். இதற்கு இடமளிக்கப்படக்கூடாது.

22ஆவது திருத்தச்சட்டவரைவு முழுமையானது இல்லை என்றபோதிலும், அதன்மூலம் ஜனநாயக திசையை நோக்கிச் செல்லலாம். எனவே, அந்தச்சட்ட வரைவு நிறைவேற்றப்படவேண்டும் - என்றார் விமல். எனினும், இந்தக் குற்றச்சாட்டை ஆளுங்கட்சி நிராகரித்தது. (ஒ-44)

# சிறிலங்காவில் ஆழமாகும் பொருளாதார நெருக்கடி!

## உலக வங்கி எச்சரிக்கை

நீடித்து நிலைக்க முடியாத கடன் மற்றும் கடுமையான பணச்சமநிலை இன்மை காரணமாக சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி ஆழமடைந்து வருகின்றது. பொருளாதார நெருக்கடியைக் கட்டுப்படுத்த ஆழமான சீர்திருத்தங்களை சிறிலங்கா வேகமாகப் பின்பற்றவேண்டும்.

இவ்வாறு உலக வங்கி வெளியிடும் வருடத்துக்கு இருமுறை புதுப்பித்தல் அறிக்கையில் சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் உலக வங்கியின் மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான நாட்டு இயக்குநர் ஃபாரிஸ் எச். ஹடாட் ஜெர்வோஸ் மேலும் குறிப்பிடுகையில்;

இலங்கை மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியில் மூழ்கியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி இந்த ஆண்டு 9.2 சதவீதமாகவும், 2023இல் மேலும் 4.2 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுக்க ஆழமான சீர்திருத்தங்களை சிறிலங்கா அரசு வேகமாகப் பின்பற்ற வேண்டும். இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் சேவைத்துறை, பிராந்தியத்தின் மிகப்பெரிய பொருளாதாரம், உலக சராசரியை விட வலுவாக மீண்டுள்ளது.

சிறிலங்கா சமூகப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும் அதேவேளையில் ஏழ்மையான மக்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கடன் மறுசீரமைப்பு மற்றும் ஆழமான சீர்திருத்த வேலைத்திட்டம் ஆகியவற்றை சிறிலங்கா விரைந்து நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். நிபந்தனைகள் பூர்த்தியானால் முழுக்கடனிலிருந்தும் சிறிலங்கா மீளும்!

## இலங்கைக்கான செயற்பாட்டு அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 8

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட பணியாளர் மட்ட உடன்பாட்டு நிபந்தனைகள் சிறிலங்கா அரசு விரைவில் பூர்த்திசெய்யுமாயின் சிறிலங்கா அரசை கடனிலிருந்து முழுமையாக விடுபடக்கூடிய அடுத்த கட்ட நடவடிக்கையை சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளும் - இவ்வாறு சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான மூத்த செயற்பாட்டு அதிகாரி மசாஹிரோ நொசாக்கி ஊடகமொன்றின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி 2.9 பில்லியன் டொலரை சிறிலங்காவுக்கு வழங்குவதற்கான பணியாளர் மட்ட உடன்பாட்டை சர்வதேச நாணய நிதியம் பூர்த்தி செய்துள்ளது. இந்த உடன்பாடு, 48 மாதங்களுக்கான செலுத்துகையைக் கொண்டுள்ளது.

இந்த உடன்பாடு நிறைவேற்றப்படு மானால் , சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கையின்படி, தற்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்பாடு நிர்வாகக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நிர்வாகக் குழு சிறிலங்காவுக்கு நிதியுதவிகளைச் செய்வதற்கு செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

அத்துடன் சிறிலங்காவை கடனிலிருந்து முழுமையாக விடுவிப்பதற் குரிய மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட பணியாளர் மட்ட உடன்பாட்டை சிறிலங்கா முதலில் பூர்த்தி செய்யவேண்டும்.

அவ்வாறு பூர்த்திசெய்யுமாயின், அடுத்த கட்ட நடவடிக்கையை சர்வதேச நாணய நிதியம் மேற்கொள்ளும். அதுவரைசர்வதேச நாணய நிதியம் காத்திருக்கும் - என்றார். (ச-இ)

### கம்பியா குழந்தைகள் இறப்பு:

## சந்தேகிக்கப்படும் மருந்து இலங்கைக்குள் இல்லை



கொழும்பு, ஒக். 8

மேற்கு ஆபிரிக்க நாடான கம்பியாவில் 66 குழந்தைகள் உயிரிழப்புடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 4 இருமல் மருந்துகள் இலங்கையில் இறக்குமதி செய்யப்படவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்ததாவது:-

எமது நாட்டுக்கு மருந்துகளை இறக்குமதி செய்யும்போது கவனமாக ஒழுங்குபடுத்தும் முகவர் நிலையங்கள் நடைமுறையில் உள்ளது.

சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த சந்தேகிக்கப்படும் மருந்துகள் இறக்குமதி செய்யப்படவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

அத்துடன் பல்வேறு நாடுகளால் நன்கொடையாக வழங்கப்பட்ட மருந்துகளும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. எனினும் குறித்த மருந்துகள் இலங்கையில் கண்டறியப்படவில்லை - என்றார்.

இதேவேளை - குறித்த நான்கு இருமல் மருந்துகளின் தயாரிப்புக்களால் கம்பியாவில் 66 குழந்தைகள் உயிரிழந்தனர் என வெளியான தகவல் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ 4 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ தரகர் தேவையில்லை.
- ✓ A-09 வீதி முகப்புடன் காணி உள்ளது.

தொடர்பு: 077 8748 135
077 4082 649

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் வீதியில் இரண்டாவது காணி.
- ✓ புத்தூர் சந்தியிலிருந்து 1 KM தூரம்.
- ✓ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 KM தூரம்
- ✓ நன்னீர் ஊற்று
- ✓ நல்ல சூழல்.

தொடர்பு: 077 62 34 204
076 43 65 814

### முல்லை மீனவர் போராட்டம்

## கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள விசாரணைக் குழு அறிக்கை சேகரிப்பு

முல்லைத்தீவு, ஒக். 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் மீனவர்கள் போராட்டம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்க கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் விசாரணைக் குழுவொன்று கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் 6 ஆம் திகதி முல்லைத் தீவுக்குச் சென்று இரு மீனவ குழுக்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தக் கோரியும் அதற்குத் துணைபோகும் அதிகாரிகளை இடமாற்றக் கோரியும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் மீனவர்கள் சார்பில் மீனவர் சமாசம் மற்றும் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் ஆகியோர் முன்னிலையாகி தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்போது விசாரணைக்குழு மீனவர்களின் கோரிக்கைகள் நீரியல் வளத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கடற்றொழில் அமைச்சர் உரிய தீர்வு முன்வைப்பார் என உத்தரவாதமளிக்கப்பட்டது. அதற்கமைய போராட்டத்தை நிறைவு செய்கிறோம் எனவும் சாதகமான தீர்வு இல்லையெனில் தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் தெரிவிக்கையில்;

இந்த மாவட்டத்தில் எமக்கு அநீதிகள் இழைக்கப்படுகின்றன. எமது கடற்றொழில் இப்போது மாற்றமடைந்துவிட்டது. நாங்கள் சூடைவலை, அறக்கொட்டியான்வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. தற்காலிக சூழலுக்கு ஏற்றவாறு சுருக்குவலைக்குரிய அனுமதிகள் வழங்கப்படவேண்டும்.

தற்போது மண்ணெண்ணெய் தட்டுப்பாடு நிலவுகிறது. சட்டவிரோத தொழில் செய்கின்றோம் என்று எம்மை குறிப்பிடுகின்றனர். சட்டவிரோத தொழிலில் அவர்களும் ஈடுபடுகின்றனர்.

நான்கு கிலோமீற்றருக்குள் கரைவலையை இட்டு இரண்டு உழவு இயந்திரத்தைக் கொண்டு இழுக்கின்றார்கள். இதுவும் சட்டவிரோதம்தான். ஆனால், இதனை முல்லைத்தீவு சம்மேளனம் முன்வைக்கவில்லை. அனைவருக்கும் ஒரே சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

இருதரப்பு மீனவர்களின் கோரிக்கைகளும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என விசாரணைக்குழு தெரிவித்தது. (ச-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 01.10.2022 நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலை மாணி (B.F.A) பட்டத்தை பெற்ற



**அஜித்தா துரைராசா**

அவர்கள் மென்மேலும் பல பட்டங்கள் பெற்றுயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்*

**குடும்பத்தினர்**

அம்மன் கோவில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சந்தோப்பு.

(CS 45954) (3/6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனாவின் உதவிகளைவிட ஆபத்துக்களே அதிகம்!

## யாழ். பல்கலைக்கான நிதியுதவி தொடர்பில் விசனிக்கிறார் சுரேஷ்



**யாழ்ப்பாணம், ஒக். 8**

**யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகளுக்கான நிதியுதவி என்னும் பெயரில் சீனத்தூதுவரின் புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக 43 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. இது தானே அடித்து காயப் படுத்திவிட்டு அந்த காயத்துக்கு தானே பொருத்தமற்ற மருந்தையும் இடுவது போல் உள்ளது என்று ஈ.பி.ஆர்.எல். எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் இன அழிப்புக்கு போர்த் தளபாடங்களை சிறிலங்கா அரசாங்கத்துக்கு வழங்கி உறுதுணையாக இருந்தது மாத்திரமல்லாது, இனப்படுகொலை, போர்க்குற்றங்களிலிருந்து சர்வதேச அரங்கில் இலங்கையை காப்பாற்றி வருகிறது சீனா.

இப்பொழுது சீன அரசாங்கம் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின்மீது கரிசனை உள்ளது போல் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது.

சீன அரசைப் பொறுத்தவரையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களை தன்வசப்படுத்துவதும், அதனூடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதும் அதன் நோக்கமாக இருக்கின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியன சீனாவின் ஆக்கிரமிப்புகளையும் அதன் தேவையற்ற தலையீடுகளையும் கண்டித்திருக்கின்றன.

போரின் பின்னரான மீட்சிக்கு இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது.

50 ஆயிரம் வீடுகள், பல பாடசாலைகள் மறுசீரமைப்பு, வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு, மிகப் பிரமாண்டமான கலாசார நிலையம் என அதன் அபிவிருத்திகள் அதிகம்.

இந்தச் சூழ்நிலையில், இந்தியாவின் வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் எல்லைப் பிரச்சினையில் ஈடுபட்டுவரும் சீன அரசாங்கம், தென்பகுதியில் இந்தியப் பெருங்கடல் பிரதேசத்திலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி இந்தியாவை அச்சுறுத்த முயற்சிக்கின்றது.

இதற்கு இலங்கையின் வடபுலத்திலும் இந்தியாவின் தென்புலத்திலும் இருக்கும் ஈழத்தமிழர்களை சீன அரசாங்கம் பகடைக்காயாக பயன்படுத்த முயற்சிக்கின்றது.

இந்த முயற்சியை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதுடன் ஏமாற்றுத்தனமான இத்தகைய நடவடிக்கையை சீன அரசு கைவிட வேண்டும் என்றும் கோருகின்றோம்.

சீனாவினால் உதவிகளைவிடவும் தமிழ் மக்களுக்கு ஆபத்துகளே அதிகம் என்பதை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவரும் நன்கறிவர்.

இந்த நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களே விரும்பி ஏற்காத உதவித் தொகையை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் அலுவலகத்துக்கு நேரில் சென்று பெற்றுக்கொண்ட செயலானது தமிழ் மக்களின் உணர்வுகளையும் குறிப்பாக, யாழ். பல்கலைக்கழக மாணவ சமூகத்தையும் நீதிக்காக வீதியில் இறங்கிப் போராடிவரும் தமிழ் மக்களையும் அவமதிக்கும் செயலாகும்.

சீனா இலங்கையின் வடபகுதிக்குள் ஊடுருவுவது என்பது எவ்வளவு தூரம் பெரியளவில் உள்நோக்கங்களை சீனா கொண்டிருக்கின்றது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டு செயற்படவேண்டும். எமது மக்களின் எதிர்கால நலன்களை எந்த நேரத்திலும் நாம் மறந்துவிடக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ஒ-5)

## பெரும்போக நெற்செய்கை பணிகள் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கு நெல் விதைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தமுறை 12 ஆயிரம் வரையிலான ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

விவசாயிகளுக்கான விதை நெல்லும் வழங்கப்பட்டு வருகின்றது.

அதைவிட கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமும் வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-14-17)

## தொழிற்சங்க நடவடிக்கையால் விவசாயத் துறையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 8

விவசாய ஆலோசகர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக விவசாயத்துறையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது என விவசாயிகளால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து விவசாய ஆலோசகர்கள் கடந்த மே மாதம் முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

டொலர் பற்றாக்குறை காரணமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதைகள் தடைப்பட்டுள்ளன. இதனால் விதை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நாட்டின் விவசாயத்துறையில் பெரும் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

எனவே, விவசாய ஆலோசகர்களது கோரிக்கைகளை உடன் நிறைவேற்றி விவசாயத்துறையின் வீழ்ச்சியைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

## சர்வ வித்தியா பிரதா ஸ்ரீகாயத்திரி ஓமம்

யாழ்ப்பாணம் - நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் சர்வ வித்தியா பிரதா ஸ்ரீகாயத்திரி ஓமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணி வரைக்கும் நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14-17)

## தாச்சி சுற்றின் இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவின் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி சிற்றம்பலம் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் (பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக மைதானம்) நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் தலைவர் லயன் செ.சண்முகலிங்கம் ஜே.பி. தலைமையில் இடம்பெறவுள்ள இறுதிச்சுற்றில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ-14)

## செப்ரெம்பர் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை

தென்மராட்சிப் பிரதேச முதியவர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான செப்ரெம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் பிரதேச மக்கள் தினமும் சமுர்த்தி வங்கிகளுக்கு அலைந்து திரிகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் நோயாளிகளுக்கான கொடுப்பனவுகள் அஞ்சல் அலுவலகங்களில் பெற்று வந்தனர். ஆனால், கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அந்தந்த பிரிவு சமுர்த்தி வங்கிகளில் வழங்கப்படவுள்ளதால் சமுர்த்தி வங்கிகளில் கணக்குகளைத் திறந்து கையளிக்குமாறு பிரதேச சபைகளால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து நோயாளிகள் சமுர்த்தி வங்கிகளில் கணக்கு ஆரம்பித்து கையளித்தனர். எனினும், இதுவரை தமக்குரிய கொடுப்பனவு கிடைக்கவில்லை எனவும் இதனால் தினமும் வங்கிக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது, கொடுப்பனவு பெறுவோருக்கான கொடுப்பனவுக்குரிய கட்டு நிதி இன்னமும் வங்கிகளுக்கு கிடைக்கவில்லை. கட்டு நிதி கிடைத்ததும் வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். (ஒ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22ஆம் திருத்தமும் எட்டாக்கனியே!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம், 2005ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை குள்ளநரி என்று விளித்து உரையாற்றியிருந்தார். ரணில் விக்கிரமசிங்க தந்திரத்துக்குப் பெயர்போன ஒருவர். அதனாலேயே அவரைப் பொதுவில் குள்ளநரி என்று அழைப்பது வழக்கம்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்களில் கோத்தாபய தவிர்ந்த ஏனையோர், தாம் பதவிக்கு வந்ததும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்போம் என்று மக்களுக்கு உறுதியளித்துவிட்டு பதவிக்கு வந்ததும் அந்த அதிகாரத்தை இன்னும் பலப்படுத்தினார்கள். இதில் விதிவிலக்கு மைத்திரிபால சிறிசேன மட்டுமே. அவர் பதவிக்கு வந்ததும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவால்.

அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க தனது பிடியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மைத்திரி மூலம் வெட்டிக்குறைத்தார். அதன் ஊடாக "19"ஆம் திருத்தச் சட்டம் நடைமுறையானது. ஆனால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பதவிக்கு வந்ததும் ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லாத அதிகாரங்களை வழங்கும் "20"ஆவது திருத்தத்தை நிறைவேற்றினார். மக்கள் போராட்டங்களால் ஜனாதிபதி கோத்தாபய தப்பி ஓட, குருட்டு அதிர்ஷ்டத்தில் ஜனாதிபதியாகத் தெரிவானார் ரணில்.

நாடு பொருளாதாரத்தில் துவண்டு, மக்கள் போராட்டங்கள் எழுச்சி பெற்றபோது ஆளும் கட்சியினர், '20ஆம் திருத்தம் நீக்கப்பட்டு மீண்டும் 19ஆம் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கூறினர். அதேபோன்று நாடாளுமன்றத்தின் கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படும் என்றும் ஏற்றுக் கொண்டனர்.

மக்களால் அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப்பட்டு, அரசியல்வாதிகள் வீதிகளில் நடமாடுவதற்கே அச்சமான அந்தக் காலத்தில் எல்லாவற்றுக்கும் இணங்கிய – பம்மிய– அரசியல்வாதிகள் இப்போது தங்கள் சுயரூபத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், போராட்டக்காரர்களைக் கொடூரமாக அடக்கிய ரணில் விக்கிரமசிங்க, இந்த அரசியல்வாதிகளுக்கும் மீண்டும் துளிர்ப்பைக் கொடுத்துவிட்டார். அதன் காரணமாக அவர்கள் இப்போது, 19ஆம் திருத்தம் மீண்டும் 22ஆம் திருத்தம் வடிவில் நடைமுறையாவதையும், கோப் குழுவின் தலைமைப் பதவியை எதிரணிகளுக்கு வழங்குவதைத் தடுப்பதிலும் வெற்றி கண்டுள்ளனர்.

22ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முழு மனது இல்லை. தனது அதிகாரங்களைக் குறைப்பதற்கு அவர் ஒன்றும் புனிதர் இல்லை. குறுக்கு வழியில் கிடைத்த இந்த அரிய நிறைவேற்று அதிகாரக் கதிரையின் கால்களை குட்டையாக்க அவர் விரும்ப மாட்டார். ஆனால், எதிரணியில் இருந்தபோது குரல் கொடுத்தமைக்காக 19ஆம் திருத்தத்தை மீளவும் கொண்டு வருவது போன்று பாசாங்கு செய்ய முயல்கின்றார்.

ஆனாலும், 19ஆம் திருத்தத்தில் நாடாளுமன்றத்தை நான்கரை ஆண்டுகளின் பின்னரே ஜனாதிபதியால் கலைக்க முடியும் என்பதை 20ஆம் திருத்தத்தில் இரண்டரை ஆண்டுகள் என்று கோத்தாபய மாற்றியமைத்தார். இப்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி என்ற கதிரையில் அமர்ந்திருப்பதால், 20ஆம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டரை ஆண்டுகளை 22ஆம் திருத்தத்திலும் உள்ளடக்க விரும்புகிறார்.

இதனை சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் ஏற்கமாட்டார்கள் என்பதும் ரணிலுக்குத் தெரியும். அதேபோன்று இரட்டைக் குடியுரிமையுள்ளவர்கள் இலங்கை அரசியலில் உறுப்பினராவதைத் தடுக்கும் சரத்து 19ஆம் திருத்தத்தில் இருந்தது. அதையும் 22ஆம் திருத்தத்தில் உள்ளடக்கியிருக்கின்றார் ரணில். இதை பஸில் ராஜபக்ச அனுமதிக்க மாட்டார் என்பதும் ரணிலுக்குத் தெரியும்.

எனவே 22ஆம் திருத்தத்தில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் ஏற்றுக் கொள்ளாத விடயங்களை உட்புகுத்தி, அவர்கள் ஊடாக 22ஆம் திருத்தம் நிறைவேற்றுவதை தடுத்து தனது நிறைவேற்று அதிகாரத்தை தக்க வைப்பதற்கே ரணில் முயற்சிக்கின்றார். அவர் அதில் வெற்றியும் பெறக் கூடும். ஆனால் 22 ஆம் திருத்தமாவது நிறைவேறுமென நினைத்து வழமைபோல ஏமாறப்போகும் மக்கள்தான், பாவம்.

### நாளொரு நல்வார்த்தை

" புன்னகையே அன்பின் சின்னம்... அதுவே நாம் பிறருக்குக் கொடுக்கும் அழகிய பரிசு...!"

- அன்னை தெரேசா



# ஆயுதம் இல்லாத சீனாவின் போரை வடக்கு மக்களுடன் எதிர்கொள்வோம்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 8**

**தமிழ் மக்களை பொருளாதார ரீதியில் அழிப்பதற்காக ஆயுதம் இல்லாத போரைச் சீனா முன்னெடுக்குமாயின் மக்களுடன் சேர்ந்து எமது வளத்தைப் பாதுகாக்க போராடத் தயங்க மாட்டோம் - இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடபகுதியில் சீனா ஆதிக்கத்தை பலப்படுத்துவதன் ஒரு வடிவமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிக் கடல்களில் சீனா முதலீட்டுடன் அட்டைப் பண்ணைகள் செயற்படுவதாக எண்ணுகிறோம்.

சீனா நேரடியாக அட்டைப் பண்ணைகளை அமைக்க முயற்சிகள் மேற்கொண்ட போதும் பல்வேறு தரப்புக்களில் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில் மறைமுகமாக கொழும்பு நிறுவனங்கள் ஊடாக முதலீடு செய்துவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வளமான எமது குடாக்கடலின் பல ஏக்கர் பரவைக் கடல் பகுதிகளை முறையற்ற விதத்தில் அட்டைப் பண்ணைகள் அமைத்து வருவதாக அறிகிறோம். இயற்கையாகவே மீனினங்கள் இனப்பெருக்கத்துக்கேற்ற கண்ட மேடை பிரதேசங்களைத் தன்னகத்தே கொண்ட எமது குடாக்கடல் இயற்கையாகவே இறால் உற்பத்தி பெருகும் இடங்களாகவும் காணப்படுகிறது. இந்தப் பிரதேசங்களில் அட்டைப் பண்ணைகளை அமைத்து கடல் நீரோட்டங்களை தடுத்து எமது கடலை நாசப்படுத்தும் செயற்பாட்டை சீனா மேற்கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதன் ஆரம்பப் புள்ளியாக பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராஞ்சிப் பகுதியில் சீன முதலீட்டு பின்னணியில் பண முதலைகளால் ஆரம்பிக்கப்பட்ட பண்ணையால் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் அழியும் நிலையில் உள்ளது. அது மட்டுமல்லாது குறித்த பகுதிகளில் பணத்தை வாரி வழங்கி முறையற்ற அட்டை பண்ணைகளை நிலைநிறுத்துவதற்காக போராட்டங்களைத் தூண்டிவிடும் செயற்பாடுகளே இடம் பெற்று வருகிறன.

இவ்வாறான போராட்டக்காரர்களால் மீனவ சமூகம் இரண்டாகப் பிளவுபட்டு ஒருவரை ஒருவர் மோதிக் கொள்ளும் நிலையை சீனா உருவாக்கி தனது இருப்பை தக்க வைக்க முயல்கிறது

மேலும், சீன அரசாங்கத்தால் யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேரடியாக வருகை தந்து வழங்கப்பட இருந்த 4.3 மில்லியன் ரூபாவை ஏற்க மாட்டோம் என எதிர்ப்புத் தெரிவித்தோம். இந்நிலையில் கொழும்பில் இருக்கும் சீனத் தூதரகம் தந்திரமான முறையில் பல்கலைக்கழக துணைவேந்தர் சற்குணராஜாவை கொழும்புக்கு அழைத்து நிதியை வழங்கியமை நாகரிகமற்ற செயற்பாடாக பார்க்கிறோம்.

சீனா தற்போது உதவி என்ற போர்வையில் வடக்கு - கிழக்கு தமிழர் பகுதிகளுக்குள் ஊடுருவுவது ஏதோ ஒரு சதித் திட்டத்தை தனக்கு சாதகமாக நிகழ்த்துவதற்கு முன்னகர்வதாகவே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகிய நாங்கள் பார்க்கிறோம்.

எமது கடல் எமக்குச் சொந்தமான நிலையில் அட்டைப் பண்ணை என்ற போர்வையில் மீனவ மக்களையும் எமது கடலையும் சீனா கையகப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றுள்ளது. (ஒ-125)


### நாளை

09.10.2022
ஞாயிற்றுக்கிழமை
புரட்டாதி - 22

சுபநேரம் : 09.02 – 10.32
ராகுகாலம்: 04.32 – 06.02

பூரணை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று சர்வதேச ஆதரவு சிகிச்சை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

# மரணிக்கும் வரையில் மகிழ்ச்சியை வழங்கும் ஆதரவு சிகிச்சை

மருத்துவர் பா.நிசாகன்
ஒருங்கிணைப்பாளர்
நடமாடும் ஆதரவுச்சிகிச்சைப் பிரிவு
வடமாகாணம்.

ஆதரவு சிகிச்சை என்பது தீராத அல்லது குணப்படுத்த முடியாத நோய்கள் மற்றும் வலி வேதனையைக் கொடுக்கும் நீண்டகால நோய்களால் அவதியுறும் நோயாளிகளினதும் அவரது குடும்பத்தினரதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் வழங்கப்படும் சிகிச்சையாகும். மரணத்தை குறுகிய காலத்தில் எதிர்நோக்கும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சையும் இதில் உள்ளடங்குகின்றது. இந்தச் சிகிச்சையானது மருத்துவர்கள், தாதியர்கள், இயன்வழி சிகிச்சை வழங்குநர்கள், சமூகநல ஆர்வலர்கள் உட்பட பலதரப்பட்ட துணை மருத்துவ பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து வழங்கும் பல்துறை சார்ந்த ஒரு சிறப்பு பராமரிப்பு சிகிச்சை முறையாகும்.

இதன்போது நோயாளியின் உடல், மன, சமூக மற்றும் ஆன்மீகம் சார்ந்த அனைத்து விடயங்களும் கவனத்தில் உள்ளெடுக்கப்பட்டு மேன்மையான சிகிச்சை வழங்கப்படுகின்றது. இதில் ஆன்மீகம் என்பது வெறுமனே மதத்தை மட்டும் கவனத்தில் எடுக்காமல் நோயாளியின் கலாசாரம், நம்பிக்கை, வாழ்க்கையின் மீதுள்ள எண்ணப்பாடு போன்ற அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

இச்சிகிச்சை, நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை முறை அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக, இறப்பு இயற்கையானதும் தவிர்க்க முடியாததும் என்பதை ஏற்றுக்கொண்டு தேவைப்படும் உரிய அரவணைப்பையும் ஆறுதலையும் கொடுக்கும் சிகிச்சை முறையாகும். இதனை மரணவலித் தடுப்பு சிகிச்சை என்றும் தமிழில் கூறுவர்.

**ஆதரவுச் சிகிச்சையின் முக்கியமான அம்சங்கள்**

- மரணம் இயற்கையானது என்பதை ஏற்றுக்கொள்ளுதல்
- இறக்கப்போகும் நேரத்தை மாற்றியமைக்காமல் (பிற்போடவோ அல்லது முன்கூட்டவோ), நோயாளி அனுபவிக்கும் வேதனையைக் குறைத்தல் அல்லது இல்லாது ஒழித்தல்
- முன்கூட்டியே உடல், மனம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற ஆவனசெய்தல்
- நோயாளி தனது வாழ்வின் இறுதிக்காலம் வரை இயலுமான அளவு சௌகரியமாக வாழ வழிவகுத்தல். அதாவது நோயாளி அனுபவிக்கும் வலி மற்றும் ஏனைய வேதனைகளைக் குறைத்தல்.
- நோயாளியின் குடும்பத்தினருக்கு ஏற்படக்கூடிய உள ரீதியான தாக்கங்களைக் குறைத்தல்.

ஆதரவு சிகிச்சை, ஒரு நோயின் இறுதிக்கட்டத்தில் மாத்திரம் வழங்கப்படும் சிகிச்சை முறை எனும் ஒரு தவறான கருத்து எம்மிடம் காணப்படுகின்றது. ஆனால் இந்தச் சிகிச்சை, ஒரு நோயாளிக்கு தீராத நோய் கண்டறியப்பட்ட காலத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு மரணத்தை தழுவும் இறுதி நொடி வரை வழங்கப்பட வேண்டும், வழங்கப்படுகின்றது.

**ஆதரவு சிகிச்சை வழங்கப்படும் சந்தர்ப்பங்கள்**

- சிகிச்சை பயனற்ற புற்றுநோய்கள்
- சிகிச்சை பயனற்ற சிறுநீரக, இதய, ஈரல் செயலிழப்பு
- சிகிச்சை பயனற்ற நீண்டகால சுவாச நோய்கள்
- சிகிச்சை பயனற்ற நீண்டகால நரம்பு மண்டலம் சார்ந்த நோய்கள்

நோயாளிகள் தமது இறுதிக்காலத்தில் அனுபவிக்கும் பின்வரும் உடல் மற்றும் மன உபாதைகளுக்கு ஆதரவு சிகிச்சை மூலம் மருத்துவ பராமரிப்பு வழங்கப்படுகின்றது.

- உடல் நோ/வலி
- சுவாசிப்பதில் ஏற்படும் சிரமம்
- வாந்தியும் குமட்டலும்
- மலச்சிக்கல்
- நித்திரையின்மை மற்றும் மனஅழுத்தம்
- படுக்கைப் புண்

இச்சிகிச்சை முறையானது மருத்துவர் நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினருடன் கலந்துரையாடி அவர்களது முழுச் சம்மதத்தைப் பெற்ற பின் ஆரம்பிக்கப்படும். ஒவ்வொரு நோயாளியினதும் நோய்த்தன்மைக்கேற்ப நோய் அறிகுறிகளுக்கேற்ப சிகிச்சை வழங்கும் முறை மற்றும் சிகிச்சையின் அளவு என்பன மாற்றமடையும்.

**ஆதரவு சிகிச்சை கருணைக்கொலையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?**

ஆதரவு சிகிச்சை முறையானது 'கருணைக்கொலை' என்பதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். ஆதரவு சிகிச்சையில் இயற்கையாக மரணம் ஏற்படும் வரை, நோயாளி அனுபவிக்கும் வேதனைகளைக் குறைக்கவே சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கருணைக்கொலையானது உலகளாவிய ரீதியில் ஒரு சில நாடுகளில் (சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஸ்பெயின், கனடா, கொலம்பியா, லக்சம்பர்க், நியூசிலாந்து, மற்றும் அவுஸ்திரேலியா, அமெரிக்காவின் சில மாநிலங்கள்) மாத்திரமே சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

கருணைக்கொலை பற்றி இயக்குநர் பாலா இயக்கிய 'நான் கடவுள்' திரைப்படத்தில் சிறப்பாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இதில் கையாளப்படும் வசன நடையான 'வாழ முடியாதவர்களுக்கு நான் கொடுக்கும் வரம் மரணம்' என்பது கருணைக்கொலை பற்றி தமிழில் திறம்படச் சொல்லி நிற்கின்றது. இதற்கு மாறாக, ஆதரவு சிகிச்சையின்போது இயற்கையில் மரணம் ஏற்படும் நேரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

**இலங்கையும் ஆதரவு சிகிச்சையும்**

இலங்கையில் தற்போது இதற்கான சங்கம் ஆரம்பிக்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் பட்டப்பின் நிறுவனம் இச்சிகிச்சைக்கான மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் செயலூக்கமுள்ள முன்னேற்றம் ஏற்படாமை கவலைக்குரிய விடயமாகவே உள்ளது. இதற்கு சமூக, சமய, கலாசாரம் சார்ந்த எண்ணப்பிறழ்வுகள் காரணிகளாக அமையலாம். உதாரணமாக, இறக்கும் போது வலியை முற்றாக அனுபவித்து முடித்துவிட்டால் பாவங்கள் இல்லாதுபோகும் எனும் கோட்பாடு இன்றளவும் சில மதங்களால் நம்பப்படுகிறது.

**வடக்கு மாகாணம்**

வடமாகாணத்தைப் பொறுத்தளவில், இச்சிகிச்சையானது 2014 ஆம் ஆண்டளவில், வெளிநாட்டு கற்றல் பயிற்சியை நிறைவுசெய்து நாடு திரும்பிய பொது மருத்துவ நிபுணர்களால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது தெல்லிப்பழை, வவுனியா மருத்துவமனைகளில் கிளினிக் மூலம் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகின்றது. வீட்டுக்குச் சென்று வழங்கப்படும் ஆதரவு சிகிச்சையானது, வடமாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

இதுவரை, வடமாகாணத்தில் அண்ணளவாக 300 நோயாளிகள் இச்சேவையைப் பெற்று பயனடைந்துள்ளனர். இச்சேவையானது தடையின்றி தொடர வேண்டுமாயின் சுகாதார அமைச்சால் உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டுமென்பதற்கு மாற்றுக்கருத்து ஏதுமில்லை. இயற்கையாக இறக்கும் நோயாளிகளுக்கு ஆதரவு சிகிச்சை தரத்தவறுவது நியாயமற்ற செயற்பாடாகும். எமது பாரம்பரிய மருத்துவத்துறையில் ஆதரவு சிகிச்சைக்காக கஞ்சா பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

தற்போது, ஆதரவு சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் மோபின் வகை மருந்துகளுக்கு அடிமையாகும் ஆபத்து காணப்படுவதால் இவற்றை சாதாரணமாக மருந்தகங்களில் பெற்றுக்கொள்ள முடியாது. அரசாங்க மருத்துவமனைகளில் (ஆதார, மாவட்ட, போதனா) மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன், இம்மருந்துகள் தொடர்பாக மிகவும் இறுக்கமான நடைமுறைகள் மருத்துவமனைகளில் பின்பற்றப்படுகின்றன.

இச்சிகிச்சை முறையானது இலங்கையில் உயர்தரத்தில் வழங்கப்பட்டு எமது மக்கள் மரணபயம் என்பதிலிருந்து விடுபட்டு உயர்வாழ்க்கைத்தரத்துடன் வாழ்ந்து இறுதிக் காலத்தை நேர்மறையாகவும் தைரியத்துடனும் அணுக வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கட்டடத் திறப்பு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும்

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவும் சங்கத்தின் 24 ஆம் ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டமும் திருநாயவல்களத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.


சுமார் 82 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.ராஜேஸ்வரன் தலைமையில் வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமனால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிசோர், வவுனியா மாவட்டச்செயலர் உட்பட அரசியல் பிரமுகர்கள், பேருந்து உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஓ-14,110)

## வட்டுவாகல் பாலத்தால் பயணிப்பதில் அவதானம்

முல்லைத்தீவு, ஒக். 8

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதான வீதியின் முதன்மையான பாலமாகக் காணப்படும் வட்டுவாகல் பாலத்தின் ஒருபகுதி தாழிறங்கிக் காணப்படுவதால் அந்தப் பகுதியால் பயணிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் உள்ள குறித்த பாலத்தை புனரமைத்துத் தருமாறு கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14,19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் பணியாற்ற விரும்புவோர் தொடர்புகொள்ளவும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து

வடமாகாணத்துக்கு வெளியே கடமையாற்றும் வட மாகாணத்தைச் சேர்ந்த சுகாதார அலுவலர்கள், வடமாகாணத்துக்கு இடமாற்றம் பெற்று பணியாற்ற விரும்பினால் அவர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் திலிப் லியனகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

பிற மாகாணங்களில் தற்போது முதல் நியமனம் பெற்று கடமையாற்றும் வடமாகாணத்தை சொந்த இடமாகக் கொண்டுள்ள சுகாதார அலுவலர்களில், வடமாகாணத்தில் சேவையாற்ற விரும்பும் எவராவது இருந்தால் அவர்கள் தமது முழுப் பெயர், தற்போது கடமையாற்றும் சேவை நிலையம், அது அமைந்துள்ள மாவட்டம் மற்றும் தொடர்பு இலக்கம் ஆகிய விவரங்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது 777842861 என்ற வட்ஸப் செயலி ஊடாகவும் அனுப்பி வைக்கலாம் - என்றுள்ளது.

(ஒ-14-214)


# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 02 . 1968

இறப்பு 06 . 10 . 2022



## முருகையன் நாவலன்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் முருகையனின் மகன் நாவலன் (கண்ணன்) கடந்த (06.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையன் தவமணிதேவி தம்பதிகளின் புதல்வனும், திருமதி நாமகள் அவர்களின் சகோதரரும், திரு. செல்வகுமாரன் (பாபு) அவர்களின் மைத்துனரும், கிருத்திகன், அபிராமி அவர்களின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.10.2022) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கொட்டாஞ்சேனை VTV தொடர்மாடிக் குடியிருப்பில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, முற்பகல் 10.30 மணியளவில் புதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
011 238 4878 (CS 938) (3/6) செல்வகுமாரன் (பாபு)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 . 07 . 1930

மறைவு 08 . 09 . 2022



## ஸ்ரீமதி பத்மாவதி நன்னித்தம்பி

தினம் தினம் தொழுகை போது
தெய்வத்தின் திருமுன்பு நின்று
மனந்தனில் வேறு எண்ணம்
இன்றியே எங்கள் வாழ்வை
நினைவினிற் கொண்டாளன்னை
நீடிய நோன்பு நோற்றாள்
இன்னுயிர்த் தெய்வந் தன்னை
எப்பிறப் பென்று காண்போம்.

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்
077 129 8159

"பரிமளம்"
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

(cs:21020(2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 05 . 1945

மறைவு 03 . 10 . 2022



## திருமதி வள்ளிநாயகி திருநாவுக்கரசு (கிளி)

யாழ். சரவணை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி திருநாவுக்கரசு அவர்கள் 03.10.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், உமாகௌரி (கனடா), மாதுமை (பிரான்ஸ்), கஸ்தூரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருநீதன், குணசீலன், சுபாஸ் ஆகியோரின் அன்பு மாமியும்,கணேசலிங்கம் (இளைப்பாறிய அதிபர்), குறிஞ்சிவேந்தன், மகாதேவன், பகீரதி, சுந்தரமூர்த்தி, புஸ்பராணி, செவ்வேள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அம்பிகா மற்றும் சாந்தி, திருமணச்செல்வி, கந்தப்பிள்ளை, வசந்தா, கணேசமூர்த்தி, மதிவதனி, காலஞ்சென்றவர்களான S.T.பழனியப்பா, விசாலாட்சி, S.T கணேஸ், மகாலட்சுமி மற்றும் S.T.மகாலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விஸ்வலிங்கம், ரத்தினாம்பிகை, இராமசாமி மற்றும் பொன்மயிலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகலியும், வர்சன், திவ்யன், அக்ஷயன், தணிகன், தியா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.10.2022 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கௌரி - மகள்
• Mobile : +164 776 96145
கணேசலிங்கம் - சகோதரன்
• Mobile : + 94 775 805 500
மகாதேவன் - சகோதரன்
• 077 034 5141

தகவல்:
குடும்பத்தினர்

(cs.46955) 2.6)

# மரண அறிவித்தல்

மலர்வு 15 - 07 - 1940

உதிர்வு 06 - 10 - 2022



## திருமதி கனகம்மா சண்முகம்
## (வெள்ளையம்மா)

மருதங்குளம் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சண்முகம் அவர்கள் கடந்த (06.10.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், வினாசி - பாறி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகம் அவர்களின் அன்பு மனைவியும், இராசேந்திரன், நிமலேந்திரன், விஜிதா, சுரேந்திரன், கஜேந்திரன், உதயேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நளினி, மாலதி, சத்தியசீலன், தனிதா, சத்தியப்பிரியா, அகிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அபிநாத், அகானா, வெண்ணிலா, தாரகன் அறிஞன், தேனிலா, தணிகன், பூர்விகா, மிதுனன், துஷாஜினி, தரணிகா, நிவிஜா, சஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, தங்கம்மா, வேலுப்பிள்ளை, வல்லிபுரம், செல்லம்மா, நல்லம்மா மற்றும் பொன்னம்மா (தேவி), நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தருமன், இராசம்மா, நல்லம்மா, தங்கம்மா, மற்றும் சிவசம்பு ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சின்னத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 453 3076 (CS 21128 ) (3/6) தகவல் : குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் உறவு எப்போதும் உறுதியானது

## இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 8

இராமாயணம் முதல் பௌத்தம் வரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நீண்ட வரலாற்று உறவு உள்ளது. சீதாவும் சங்கமித்தமும் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு பாலத்தை உருவாக்கியுள்ளனர். எங்கள் உறவு மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். உறவு சமச்சீரற்றது. ஆனால், அது சிறப்பானது. இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.


இந்திய ஊடகத்துக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியா - இலங்கை இடையிலான உறவுகள் சிறப்பானவை. இந்தியாவின் பாதுகாப்பு நலன்கள், எங்களின் சொந்தப் பாதுகாப்பு நலன்களைப் போன்றவை. சீனா மிக நெருங்கிய நட்பு நாடு. இந்தியா எங்கள் சகோதர, சகோதரி போன்ற நாடு என்று மஹிந்த ராஜபக்ச அடிக்கடி கூறுவார். குடும்பத்தில் சண்டைகள் வரலாம். ஆனால், கடைசி வரையில் அது எங்கள் குடும்பம்தான் என்றும் அவர் குறிப்பிடுவார்.

பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு தோள்கொடுத்தது இந்தியாதான். இந்தியா எமக்கான உதவிகளை வழங்கியது மாத்திரமல்லாமல், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட ஏனைய தரப்புடன் எங்களுக்கு ஆதரவாக பேச்சு நடத்தியது.

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு சீனக் கப்பலை அனுமதித்தமை குழப்பமான நேரத்தில் அதிகாரிகள் மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு.

புவிசார் அரசியல் பதற்றங்களில் 'ஆபத்தான கட்டத்துக்கு' பதிலளிக்கும் வகையில் சிறிய நாடுகள் கொள்கைகளை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனின் கருத்துக்களை இந்த இடத்தில் நினைவுகூருகின்றேன்.



அத்துடன் இந்த விவகாரத்தில் நாங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால், இந்தியாவுடன் மிக நெருக்கமான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும். மேலும் நாங்கள் ஒரு ஒத்துழைப்பு கட்டமைப்பைக் கொண்டிருக்கவேண்டும்.

மேலும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். அது தொடர்பில் தமிழக முதலமைச்சரையும் சந்தித்தேன்.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்ததாகக் கூறி இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்ந்து வருகின்றன. அது தொடர்பில் அவதானம் செலுத்துகின்றோம். இலங்கையின் சுற்றுலாத்துறையில் இந்திய சுற்றுலாவிகள் முக்கியமான இடத்தை வகிக்கின்றார்கள் - என்றார். (ஒ-5)

Jaffna Diocese of the Church of South india



200th Birth Anniversary of Dr.Samuel Fisk Green

There will be a special service for the life and work of Dr. Samuel Fisk Green the 8th of October 2022 at 11.30 am in the Cathedral, Vaddukoddai. Your presence is greatly appreciated.

Chairman
Board for medical work

(cs 46953) (2.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 06.10.2022 அன்று நடைபெற்ற 36 ஆவது பட்டமளிப்பு விழாவில் மருத்துவத்துறையில் M.B.B.S பட்டம் பெற்ற செல்வி சவ்னா காணிக்கையூலன் அவர்கள் மென்மேலும் பல பட்டங்கள் பெற்றுயர பாராட்டி வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:
நிர்வாகம்
Best & Best
674A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(cs21090)(2.6)

# 63 வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 8

கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்.மாவட்டத்தில் 63 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 25 லட்சத்து 74 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமும் அறவிடப்பட்டது என்று யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவலர்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரி ந.விஜிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்.மாவட்டம் முழுவதும் பாவனையாளர் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்போது வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலையைக் காட்சிப்படுத்தத் தவறியமை, அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை மீறி பொதுமக்களுக்கு விநியோகித்தமை, உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் விவரங்கள் இல்லாது பொருள்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, நுகர்வோரை ஏமாற்றும் நோக்கோடு பொருள்கள் மீது பொறிக்கப்பட்ட விலையை மாற்றி புதிய விலையை சேர்த்தமை உள்ளிட்ட பல குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதனையடுத்தே 63 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய வர்த்தகர்களுக்கு நீதிமன்றத்தால் 25 லட்சத்து 74 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமும் அறவிடப்பட்டது.

இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர்கள் அலுவலர்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாக தேடுதல்கள் மற்றும் கண்காணிப்பு விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் விதமாக செயற்படும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே, யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் விதிமுறைகளுக்கு அமைய தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-14-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
05 . 01 . 1956



உதிர்வு
07 . 10 . 2022

## திருமதி குணதாசன் ரஜனி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணதாசன் ரஜனி நேற்று (07.10.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னபூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும். குணரத்தினம் குணதாசன் அவர்களின் (கிச்சான். சீமெந்துக் கூட்டுத்தாபனம், K.K.S.) அன்பு மனைவியும், காலஞ்சென்ற குணரத்தினம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், றங்கன், பவானி வரதராஜன், வசந்தினி கனகரட்ணம், வாகினி குகநாதன். சாந்தினி சிவகணநாதன், ரஜீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயகுமார் (லண்டன்), விஜயகுமார், அருந்ததி ஆகியோரின் அன்பு மைத்துனியும், றோகன், நிர்பன் (Territory Manager, Asian Paints Causeway) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமினி (சமுர்த்தி உத்தியோகத்தர்), "சாதனா (ஆசிரியை, யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி.) ஆகியோரின் அன்பு மாமியாரும், கம்சிகா, மதுசன், ஆரத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்துக் கல்லூரி வீதி,**
**உரும்பிராய் வடக்கு.**

**தகவல்:**
**கு.குணதாசன் (கணவர்)**
**077 7746 791**

(CR 36822) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 05 . 1960



மறைவு
06 . 10 . 2022

## திருமதி ஞானசேகரம் பேரின்பவதி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கிறேசர் லேன், இராசபாதை வீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானசேகரம் பேரின்பவதி அவர்கள் கடந்த (06.10.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானசேகரத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பேரம்பலம் பகீரத லெட்சுமி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற ஞானசிவம் காமாட்சி தம்பதியரின் அருமை மருமகளும், காயத்திரி, பிரியங்கா (ஆசிரியை வேலணை மத்திய கல்லூரி), தர்ஷி (யாழ். மருத்துவ பீடம் 3ஆம் வருட மாணவி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன், கிருஷ்ணகுமார் (பொறியியலாளர் GSMB) ஆகியோரின் அன்பு மாமியாரும், கமலாவதி (ஆசிரியை யா/நாவாந்துறை றோ.க.வித்தி), சரஸ்வதி (சுவிஸ்), அருந்தவ ராசா (சுவிஸ்), சந்தானலட்சுமி (ஆசிரியை யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி), ஆனந்தராசா (அமெரிக்கா), பாக்கியலட்சுமி (ஆசிரியை கிளி/ அழகாபுரி வித்தி யாலயம்), பாக்கியராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நிர்மலகுமார், சியாமா (சுவிஸ்), மனோரஞ்சிதன், ஜெயா (அமெரிக்கா), நிகேதரன் (ஆசிரியர் கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), தயாளினி (லண்டன்), ஞானதீபம், சிவஞானம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஐஸ்ணவிகா, காவியா, ஸ்ரீநியா, ஸ்ரீபிர சாந், அஹானா, லக்ஷிகா, லக்ஷனா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக வேலணை 'அம்பலவி' இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்: (கணவர்)**
**திரு.ஞா.ஞானசேகரம்**
**077 9312 967**

(CS 21138) 1/6

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி சோமசுந்தரம் சிவயோகம்



**தோற்றம்: 30.10.1936 மறைவு:05.10.2022**

காளிகோவிலடி கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் சிவயோகம் அவர்கள் கடந்த (05.10.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், வனதாசன் (சுவிஸ்), குகதாசன் (சுவிஸ்),புஸ்பராணி, வசந்தராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தமயந்தி (சுவிஸ்), வியஜா (சுவிஸ்), பாலசிங்கம், நகுலேஸ்வரன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற பரஞ்சோதி, நடராசா (சின்னக்கிளி), காலஞ்சென்ற அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திஷாந், சோவன்ஜா, லக்ஷன், லக்ஷிகா, பபித்திரா, ஜிவித்திரா, துஷாந்த், பவதாரணி, சுவஸ்ரன், ஹீரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வைஷ்ணவி, லக்ஷகி, சாருஜா, துவான ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மகன் (சுவிஸ்) - 0041779373818**
**மகன் (சுவிஸ்) - 0041323842008**
**மகள் - 077 9315 559**
**மகள் (லண்டன்) - 00447983630372**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழிக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 8

நூலக நிறுவனத்தால் நிகழ்த்தப்படும் இணைய வழி நிகழ்ச்சித் தொடர் வரிசையில் 55 ஆவது நிகழ்வாக "ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஈழத் துப் பயண இலக்கியங்கள்" எனும் தலைப்பிலான இணையவழிக் கலந்துரையாடல் இன்று சனிக்கி ழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும்.

கலந்துரையாடலில் https://us02web.zoom.us/j/ என்ற இணையத்தளத்தினூடாகவும் 81415584070 என்ற சூம் செயலியூடாகவும் கலந்து கொள்ளலாம்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ் நூலகராகக் கடமையாற் றும் இராசையா மகேஸ்வரன் நிகழ்த் தவுள்ள கலந்துரையாடலில் அனைவ ரையும் பங்குபற்றி பயனுறுமாறு நூலக நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஓ-14)

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 12 . 1939



மறைவு 07 . 10 . 2022

### திருமதி குணமணி இளையதம்பி

சரசாலையைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணமணி இளையதம்பி அவர்கள் நேற்று (07.10.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் இளையதம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோகரன் (சுவிஸ்), இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), திலகேஸ்வரன் (ஓய்வு பெற்ற வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி), கிருபாகரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (கனடா), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), கோமதி (ஆசிரியர் யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வறஞ்சினி (சுவிஸ்), றஜனி (பிரான்ஸ்), நவநீதவல்லி (ஓய்வுபெற்ற வைத்தியசாலை மேற் பார்வையாளர்), நந்தினி (பிரான்ஸ்), சகிலா (கனடா), சசிகலா (பிரான்ஸ்), மதுரா கரன் (ஆசிரியர்-கிளி/ கிளாலி றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியா ரும், நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சின்னம்மா காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரவணன், சாரங்கன், சாருதீபன் (சுவிஸ்), சங்கரன், கார்த்திகன், ஜனனி (பிரான்ஸ்), நிகிலா-மதியழகன் (இத்தாலி), ஆதித்தன்-சாருஜா (சுவிஸ்), ஆதவன், கதிரவன் (பிரான்ஸ்), விதுஷன், வர்சன், அபிஷன் (கனடா), கரிகரன், கஜகரன் (பிரான்ஸ்), திருவரங்கன், நர்த்தனன், கவிமாறன் (உசன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.10.2022 திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகன் - திலகேஸ்வரன் - 077 794 9075
மருமகன் - மதுராகரன் - 077 536 3780

(CP 38234) 1/6

## காணி விற்பனைக்கு

நல்லூர் Temple Road, Navalar வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

077 6011 135

## வேலை ஆள்கள் தேவை

246, நாவலர் வீதியில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ள வேலை ஆள்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

021 222 6830, 077 352 8986

## வீடு வாடகைக்குத் தேவை

சாவகச்சேரியில் வீடு வாடகைக்குத் தேவை

T.P: 077 153 1167

### ரயில்...

இவர் சைக்கிளில் வியாபார நோக்கமாகச் சென்றபோதே விபத்து நடந்துள்ளது. ஏவி வீதியில் ரயில் கடவையைக் கடக்கும்போது ரயிலுடன்மோதிய இவர் தூக்கியெறியப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார்.

அதேவேளை, நேற்றுமுன்தினமும் ஒருவர் யாழ்ப்பாணத் தில் ரயிலுடன் மோதி உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (அ-எ-26)

### வியாபாரிகள்...

வாரத்தில் 6 வியாபாரிகள் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கொக்குவிலில் நேற்றுக் கைது செய்யப்பட்ட பெண்ணிட மிருந்து சுமார் 3 கிராம் 200 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளது.

கொக்குவில் பகுதியில் கடந்த 3ஆம் திகதி உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரி என்று சந்தேகத்தில் கைது செய் யப்பட்ட பெண்ணின் உறவினரே நேற்றைய தினம் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

### வல்லிபுரம்...

நடைபெற்று காலை 8.45 மணிக்கு வல்லிபுரம் ஆழ்வார் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள் வழங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழாவை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வருடாந்த கடல் தீர்த்தத் திருவிழா நாளை 3 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## மரண அறிவித்தல்

### திருமதி நடராசா குணபூஷணி



நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா குணபூஷணி அவர்கள் நேற்று (07.10.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி, யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நடராசா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தி அதிகார சபை) அவர்களின் பாசமிகு மனைவியும், சுரநுதா (ஆசிரியை மாஹோ, மடபொகுண மாஹிரா வித்தியாலயம்), சோபிதா (ஆசிரியை, நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட வித்தியாலயம்), மயூரன் (அதிபர், யா/ புங்குடுதீவு றோ.க.த.க. பாடசாலை), நர்த்தனன் (ஆசிரியர், யா/ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை), பிரணவன் (உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசந்த (ஓய்வுபெற்ற அலுவலர், இலங்கை கடற்படை), நந்தகுமார் (வர்த்தகர்), சகிலா (ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), வேணுஜா (ஆசிரியை, யா/கோண்டாவில் குட்டிச் சுட்டி முன்பள்ளி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, மகேஸ்வரி, சரஸ்வதி மற்றும் சவுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற பெரியநாயகி (ஆயுர்வேத வைத்தியர்) மற்றும் ஆறுமுகம் (ஓய்வுபெற்ற நிருவாக உத்தியோகத்தர், DOA இ.போ.சபை, கோண்டாவில் சாலை), கதிரேசபிள்ளை (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆங்கிலம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வர்களான இரத்தினசபாபதி (வர்த்தகர்), சொர்ணலிங்கம் (வர்த்தகர்), மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) மற்றும் திலகவதி, வரதலட்சுமி (ஓய்வுபெற்ற அதிபர் யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), காலஞ்சென்ற இந்துமதி (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி கிளிநொச்சி) மற்றும் சிவசக்தி (முன்னாள் தட்டெழுத்தாளர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், விக்கினேஸ்வரன் (முன்னாள் பணிப்பாளர், தமிழ்ச் சேவை, இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், கனடா) அவர்களின் அன்புச் சகலியும், அயிலவன், டெஷாதி, கிருசிகா, சதுர்ஷன், ரதுர்திகா, அபிவர்ஷினி, கஜவர்ஷன், கிருஷ்ணவி, அக்ஷணவி, ஆருஷ்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 28.12.1947

மறைவு 07.10.2022

6ஆம் வட்டாரம், நயினாதீவு.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 21135) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஐ.நா.வின்...

இவ்வாறு நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வில் சிறிலங்காவுக்கு எதிராகப் புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து நாட்டில் ஜனநாயக சீர்திருத்தங்களை விரைவில் ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளோம்.

புதிய தீர்மானத்தால் நாடு பாரதூரமான நிலைக்குத் தள்ளப்படும் அபாயம் காணப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தால் நாட்டுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கடன் தொகை மற்றும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையும் பாதிக்கப்படலாம்.

இலங்கை தன்னிறைவை அடைந்த நாடாக இருந்தால், இந்த விடயம் தொடர்பில் கரிசனை கொண்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. எனினும், இலங்கையிலிருந்து 70 வீதமான பொருள்கள் ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பலமாக அமைந்துள்ளது.

நாட்டில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதாக சர்வதேச நாடுகளுக்கு எடுத்துரைத்தாலும், நாட்டில் காணப்படும் சந்தர்ப்பவாத அரசியலால், சர்வதேச நாடுகளால் வழங்கப்படும் ஒத்துழைப்புகள் மேலும் தாமதமடையக்கூடும் - என்றார். (அ-எ-22)

### ஆபத்தான...

களை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தரின் மனைவி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நடந்துள்ளது.

குடும்பத் தலைவர் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு தீவைக்கப்பட்டதால் ஆபத்தான தீக்காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார், படுகாயங்களுக்குள்ளாகிய குடும்பத்தலைவரின் மனைவியை கைது செய்து நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்.

"சந்தேகநபரின் கணவன் கடுமையான தீக்காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். சந்தேகநபரே கணவன் மீது பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது" என்று பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர்.

"சந்தேகநபரின் வீட்டுக்குள் பாம்பு ஒன்று வந்துள்ளது. அதை விரட்ட சந்தேக நபர் பெற்றோலை விசிறியுள்ளார். அது அங்கு ஏற்றப்பட்டிருந்த சாம்பிராணி குச்சியில் பட்டு தீ ஏற்பட்டுள்ளது. கணவன் மீது பெற்றோலை ஊற்றும் எண்ணம் சந்தேகநபரிடம் இல்லை" என்று சந்தேகநபரின் சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, சந்தேகநபரான பெண்ணை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ-எ-26)

### வாக்குறுதிகளை...

தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் என்பன சிறிலங்காவின் அந்நியச் செலாவணியில் கணிசமான பங்கு வகின்றன. ஆயினும் அவை சிறிலங்காவுக்கு ஆதரவு காட்டவில்லை.

ஆசிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பது பொதுவான மரபாகக் காணப்பட்டபோதும், இந்தமுறை இந்தோனேஷியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

ஏன் இவ்வாறு நட க்கின்றது என்று நாம் சிந்திக்கவேண்டும். ஆணித்தரமான வாக்குறுதிகளை நாம் இலகுவாகவழங்கிவிட்டு, பின்னர் அவற்றை மீறுவதே அதற்கு முக்கியமான காரணமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என்று வெளிவிவகார அமைச்சர் நாட்டின் சார்பாக வாக்குறுதி வழங்கியிருந்தபோதும், அது செயற்படுத்தப்படவில்லை - என்றார். (அ-எ)

### மோ.சைக்கிளை...

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் நேற்று தனது வீட்டின் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் இருந்துள்ளார். அப்போது மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்றுமாலை அந்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பருத்தித்துறை, திக்கம் பகுதியில் வீதியில் சென்ற பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். வேறு சில இடங்களிலும் அவர்கள் சங்கிலி அறுப்பில் ஈடுபட முயன்றபோதும், மக்கள் சுதாகரித்துக் கொண்டதால் அவர்களின் முயற்சி பயனளிக்கவில்லை.

மோட்டார் சைக்கிள் திருடப்பட்டமை தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சங்கிலி அறுப்புச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுக்காலை தனது வீட்டுக்கு முன்பாகக் கணவனுக்கு உணவு கொடுக்கக் காத்திருந்த பெண் ஒருவரின் இரண்டே முக்கால் பவுண் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-எ-26)

### பணிப்புறக்கணிப்பு...

போவதில்லை என்று ஊழியர்களின் இன்னொரு தரப்பு நேற்று அறிவித்துள்ளது.

5 கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும்12ஆம் திகதி பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என்று தொழிற்சங்கம் ஒன்று நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

எனினும், இதுதொடர்பில் பருத்தித்துறை சாலையைச் சேர்ந்த வேறு சில தொழிற்சங்கங்கள் நேற்று அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கப்படாது என்றும், மக்களுக்கான சேவைகள் வழமைபோன்று நடைபெறும் - என்றும் அறிவித்துள்ளன. (அ-எ-26)

### திருடப்பட்ட....

கடந்த 3ஆம் திகதி வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நாவாந்துறை வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. ஆயினும் சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

### மின்னல்...

அட்டமஸ்கடவையைச் சேர்ந்த சந்திரலதா (வயது-49) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தில் தாமரை இலை பறிக்கச் சென்றபோதே பெண் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளார்.

அந்தப் பகுதியில் பெண் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்தவர்கள், அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மீட்டு வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். (அ-எ-110)

### தமிழரை...

ஜனாதிபதி முறைமையானது நீக்கப்படாமையால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிராக வாக்களிப்பார்கள் என்ற அச்சத்தாலேயே நேற்று (நேற்று முன்தினம்) அந்தத் திருத்தச் சட்டவரைவை அரசு விவாதத்துக்கு உட்படுத்தவில்லை. விவாதத்துக்கு உட்படுத்தி வாக்கெடுப்புக்குச் சென்றிருந்தால் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நிச்சயமாக இழந்திருக்கும்.

எதிர்கட்சிகளில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் ஆதரவை அரசு கோருகின்ற போதிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய தேவைகளை அரசு வேறு விதமாகவே அணுகுகின்றது. குருந்தூர்மலை விவகாரத்தில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதிமொழி ஒன்றை இந்தச் சபையில் வழங்கியிருந்தார்.

அனைத்துக் கட்சிகளுடனும் குறித்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை குருந்தூர்மலையில் எந்தவித பணிகளும் முன்னெடுக்கப்படாது என்று அமைச்சர் உறுதியளித்திருந்தார். இன்று (நேற்று) அதிகாலை நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கு அளவீடு செய்யும் பணிகளுக்குச் சென்றுள்ளனர்.

1933 ஆம் ஆண்டு குருந்தூர்மலையானது அகழ்வாராய்ச்சிக்குரிய தளமாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோது 76 ஏக்கர் நிலப்பரப்பு மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. இதனால், தற்போது 296 ஏக்கர் நிலப்பரப்பு அகழ்வாராய்ச்சிக்கென ஒதுக்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போர் காரணமாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாகவும் மக்களால் கைவிடப்பட்ட நிலப்பரப்பையே தற்போது அரசு அளவீடு செய்து வருகின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது, குருந்தூர்மலையில் எந்தவித நிர்மாணப் பணிகளும் இடம்பெறாது என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உறுதியளித்திருந்தார்.

எந்தவித நிர்மாணப்பணிகளையும் முன்னெடுக்கவேண்டாமென அகழ்வாராய்ச்சி நிறுவனத்துக்கும் நில அளவைத் திணைக்களத்துக்கும் கடிதம் வாயிலாகவும் அறிவிக்கப்பட்டது. அனைத்தையும் உதாசீனம் செய்து இன்று (நேற்று) நில அளவைத்திணைக்களத்தின் பணியாளர்கள் அங்கு அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளச் சென்றுள்ளனர்.

கொக்கிளாய் முதல் நாயாறு வரையிலான 6 பிரதேச செயலகப் பிரிவுகளில் மகாவலித் திட்டம் என்ற பெயரில் அரசு செய்த நடவடிக்கைகளை குறித்து நாம் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். மகாவலி திட்டத்துக்குள் ஆறு பிரதேச செயலகங்களும் உள்வாங்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்துஎந்தவிதமான தீர்மானங்களும் மேற்கொள்ளப்படாது என்று கூறப்பட்டது.

அதற்காகக் குழுவொன்று நியமிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. எனினும், அது பின்னர் மீறப்பட்டது. மகாவலித் திணைக்களம் முழுமையாக இனவாதத் திணைக்களம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அதைப்போன்றே இன்று அகழ்வாராய்ச்சிதிணைக்களமும் நில அளவைத் திணைக்களமும் வடக்கு, கிழக்கில் குடிப்பரம்பலை மாற்றுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறான நிகழ்ச்சி நிரல் வாயிலாக அரசு எவ்வாறு வடக்கு - கிழக்கு மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறமுடியும்? அதை நோக்கும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகம் இப்போதே வெளிப்படுகின்றது. கடந்த 2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க போர் நிறுத்தத்தை அறிவித்த போது வடக்கு - கிழக்கு அரசியல் கட்சிகள் ரணிலுக்கு ஆதரவாகச் செயற்பட்டன.

அது மாத்திரமன்றி நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் எதிர்த்து வலுவிழக்கச் செய்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தற்போது முழுமையாக இனவாதப்போக்கையே கடைப்பிடிக்கின்றது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவைக் கோரி நிற்பதாக சர்வதேசத்துக்குத் தெரிவிக்கும் அரசு மறுபக்கத்தில் இனவாதத்தைத் தூண்டுகின்றது. சிங்கள மக்களின் ஆதரவை மாத்திரமே முழுமையாக எதிர்பார்த்து அரசு செயற்படுகின்றது. இந்தக் கொள்கையை மாற்றிக்கொண்டு பயணிக்க முயற்சிக்காவிட்டால் பெரும்தோல்வியை அரசு சந்திக்கும்.

இனவாதப்போக்கு கொண்ட இவ்வாறான கொள்கைகள் வாயிலாக தமிழர்களையும், முஸ்லிம்களையும் அழிப்பதற்கு முயற்சித்தால் இறுதியில் நீங்களே அழிந்துபோவீர்கள். இதுவே இன்று இடம்பெறுகின்றது - என்றார். (அ-எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் - கட்டப்பிராய் சரஸ்வதி முன் பள்ளியில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ச)

## கரப்பந்தாட்ட சுற்றின் இறுதியாட்டம்

யாழ். ஒக். 8

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் சிவகுருநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 7 மணிமுதல் இளவாலை வாலிபத் திடலில் இடம்பெறவுள்ளது.

விளையாட்டுத் துறை செயலாளர் ம.மரியநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள போட்டியில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார். (14)


## வீடு வாடகைக்கு

இல.53, ராணி வீதி, நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு அரச உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

075 973 0252



## இலவச அமெரிக்க லொத்தர் விசா

2024 ஆம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்.
(18 வயதிற்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுவரும் இச் சேவையினூடாக 1000க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்.

தொடர்புகளுக்கு : 0777554528

திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, K.K.S.Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 51 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- ✓ யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- ✓ 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 1/2 KM தூரம்
- ✓ பார்வையிடும் நேரம்: காலை 06.00 - மாலை 6.00

தொடர்பு: 077 911 6983
076 755 8606

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**


- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை

**தரகர் தேவையில்லை.**

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 2417 589


# மரண அறிவித்தல்



தோற்றம்
13.04.1932

மறைவு
03.10.2022

## திருமதி நடராசா ஆச்சிமுத்து

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா ஆச்சிமுத்து கடந்த 03.10.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தையா நடராசாவின் மனைவியும் காலஞ்சென்ற தவமணியின் தாயாரும், ஜெகதீஸ்வரனின் (டென்மார்க்) மாமியாரும், ஜீவா (டென்மார்க்), ஜெகன் (பிரான்ஸ்), யனோ (டென்மார்க்), தனஞ்சயன் (டென்மார்க்) ஆகியோரின் அம்மம்மாவும், சுரேக்கா, வசந்தி, கௌசி, அனா ஆகியோரின் பேர்த்தியும், அர்ஜின், ஆரதி, டிலக்சி, தாருகா, சபீனா, அபிஷா, இமானுவேல், கிளாரா, லுகாஷ் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெகதீஸ்வரன் (மருமகன் - டென்மார்க்)
077 950 6879

(CS 21110) (3/6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.